வல்வெட்டித்துறையில்
மாரியம்மன் வழிபாடு!...........

கி.பி ஏழாம் நூற்றாண்டில் பல்லவர் காலத்தில் ஏற்பட்ட சைவசமய மறுமலர்ச்சியால் சிலப்பதிகார கண்ணகி வழிபாடு தமிழ் நாட்டில் வேறுபல உருவங்களை எடுத்தது. பல்லவர் காலத்தை தொடர்ந்து வந்த சோழர் காலத்தில் இவ்வழிபாடு அடையாளம் காணக்கூடியதாக வரலாற்றில் பல தகவல்கள் எமக்கு கிடைக்கின்றன. உதராணமாக இன்றுவரை கண்டுபிடித்ததாகக் கூறப்படும் மாரியம்மன் பேரில் அமைந்த கோயில்களில் பழைமையானது புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலாகும். இக்கோவில் தஞ்சாவூர் திருவாரூர் சாலையில் தஞ்சாவூரிலிருந்து எட்டுக்கிலே மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இக்கோவிலுக்கு “அருண்மொழிப்பேட்டை” என்ற கிராமம் மானியமாக வழங்கப்பட்டிருப்பதனைக் கொண்டு இக்கோயில் சோழர்காலக் கோயிலாகக் கருதப்படுகிறது. அருள்மொழிவர்மன் என அழைக்கப்படுபவன் முதலாம் இராஜஇராஜசோழனாகும். எனவே இக்கோயிலைக்கட்டி அதற்கு மானியமாக அருண்மொழிப்பேட்டை என்ற கிராமத்தையும் அவனே வழங்கியிருப்பான் எனக்கருதப்படுகின்றது. இந்த இராஜஇராஜசோழனே தஞ்சைப்பெருங்கோவிலையும் கட்டியது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப காலங்களில் காலங்களில் மழைத்தெய்வமான வருணனையும் பின்பு கடல்த்தாயையும் வழிபட்ட வல்வெட்டித்துறை மக்கள் ஆயிரம் ஆண்டுகளாக முத்துமாரியம்மனையே தமது குலதெய்வமாக வணங்கி வருகின்றனர். மாரி என்ற சொல்லின் பொருள் போலவே வல்வட்டித்துறை மக்களிற்கு வாரிவழங்கும் முத்துமாரியம்மனின் அருட்க்கடாட்சம் வல்வட்டித்துறை மண்ணில் அபிரிமிதமானதும் அளவிடக்கரியதுமாகும். ஈழத்திற்கும் தமிழகத்திற்குமென தொடர்பென்பது தாயும் சேயும் போன்றது. கடலில் மறைந்து விட்ட குமரிக்கண்டத்தில் எஞ்சிய ஒரு பகுதியே இந்திய உபகண்டமாகும். இந்த இந்திய உபகண்டத்தில் இருந்து சில ஆயிரம் வருடங்களுக்கு முன்பு கடற்கோள் (சுனாமி) களினாலும் கண்டநகர்வுகளினாலும் பிரிந்து அல்லது விலகிச் சென்ற பகுதியே ஈழமென்னும் இலங்கையாகும்.

குமரிக்கண்டம் என்னும் பெருநிலப்பரப்பானது கடலில் மறைந்துவிட்டபோதும் அதன் ஒருபகுதி நீர்மட்டத்திற்கு மேலாக தெரிய எஞ்சி நின்றது அதுவே இலங்கையாகும். என்பது ஆய்வாளர்களின் கருத்திலொன்றாகும். இலங்குதல் ஸ்ரீ தெரிதல், அல்லது பிரகாசித்தல் என தமிழில் பொருள் தரும் சொல்லாகும்.

இவ்வகையில் கடலின் மேலே தெரிய நின்றதனால். இது இலங்கு என்னும் பொருளில் இலங்கை என பின்னர் அழைக்கப்படலாயிற்று. இலங்கை என்னும் பெயரெச்சத்திற்கு இதுவே சரியானபதம் என்பதால் இது ஏற்றக் கொள்ளப்படும் வாதமுமாகின்றது. இந்தியாவும் ஈழமும் பிரிந்து போன காலத்தில் தான் நிலச்சரிவியலாளர்களிடையே பேதங்கள் நிலவுகின்றதே தவிர பிரிந்தது என்பதில் யாருடன் யாருமே முரண்படுவதில்லை. இவ்வாறு இலங்கையில் வாழம் மக்களும் இந்தியாவில் வாழ்ந்த முதன்மைக்குடியினரும் ஒரே மனிதகுலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதே வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும்.

கைபர் கணவாய் வழியாக மத்திய ஆசியாவிலிருந்து தெற்காக வடஇந்தியாவை நோக்கி குடியோறியவர்களில் வட இந்திய மக்கள் சமூகத்தில் மொழி பழக்கவழக்கம் போன்றவற்றில் பாரியமாற்றம் ஏற்பட்டது. எனினும் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் அவ்வாறான இனச்சூழலின் பரிமாற்றங்கள் நடந்ததாக எக்காலத்திலும் சான்றாதரங்களின் மூலம் உறதிப்படுத்தப்படவில்லை. எனினும் பாளிமொழி நூலான மஹாவம்சம் மூலம் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான மதப்பரிமாற்றம் மக்கள் குடியேற்றம் என பலவகைப்பட்ட செய்திகள் அறியக்கிடக்கின்றன. ஆனாலும் தென்னிந்தியாவிற்கும் வடஇலங்கைக்குமான தொடர்புகள் மொழி சமயம் பண்பாடு என்பனவற்றினுடாக ஆராயுமிடத்தது பாரிய வேறுபாடுகள் அற்ற ஒரே இனக்குழத்தைச் சேர்ந்த மானிட வர்க்கத்தினராலேயே இரண்டு இடங்களும் நிரப்பப்பட்டிருக்கின்றன.

முன் சொன்னவாறு வடஇலங்கைக்கும் தென்னிந்தியாவிற்குமான தொடர்பு என்பது காலக்கணிப்பிற்கு அப்பாற்பட்டது குறிப்பாக தமிழ் நாட்டிற்கும் வடஇலங்கைக்கும் ஆன தொடர்பு என்பது மொழி சமயம் என்பனவற்றுக்கு அப்பால் வியாபாரம் திருமண உறவுகள் எனபல நிலைகளிலும் தொன்று தொட்டு தொடர்ந்து வருகின்றது. பாண்டிய பல்லவ சோழ சாம்ராய்ஜங்களின் அன்புப் பிடியியில் அடிக்கடி சிக்குண்டதால் தென்னிலங்கையின் பண்பாட்டுக்கலாச்சாரத்திற்கு வேறுபட்ட அல்லது மாற்றான தமிழகத்தின் பண்பாடடடின் பலகூறுகள் வட இலங்கையில் வேருன்றி தனித்துவப் பண்பாடாக மாற்றமடைந்தது.

இவ்வாறு கடலால் பிரிக்கப்பட்ட தமிழக இலங்கை உறவுகளினை இரண்டாயிரம் வருடங்கள் கடந்தும் இடையில் பிரித்து நிற்கும் வங்கக்கடலினை மேவியும் இணைந்து நின்ற வரலாற்றுப் பெருமைமிகு மண்ணாக விளங்குவதே யாழ்ப்பாண குடாநாட்டின் வடமராட்சி பகுதியில்

அமைந்திருக்கும் எமது வல்வட்டித்துறையாகும். இங்குள்ள மக்களின் இத்தைகைய சிறப்பினை விளங்கவதற்கு ஓரிரு எடுத்துக்காட்டுக்களே போதுமானது.

1. யாழ்ப்பாண நகரத்தின் பிரதான வீதிகளின் பெயரே தெரியாத எமது மண்ணின் மைந்தர்களில் பலருக்கு வேதாரணியம் மற்றும் திருச்சி நகரங்களின் சிறு ஒழுங்கையெல்லாம் அந்நியோன்னியமானவை.

2. இலங்கையின் தலைநகரான கொழும்பில் கால் வைக்காத எம்மவர்களில் பலருக்கும் தமிழ் நாட்டின் தலைநகரான சிங்காரச்சென்னையில் சிறுவீதியும் சொந்த வீடாகவே இருக்கும்

இவ்வாறு காலம் காலமாக தமிழகத்துடன் எமது உறவைப்பேணிவந்த வல்வட்டித்துறை மக்களின் வரலாற்றில் கி.பி 985-1014 வரையாண்ட சோழப்பெருமன்னனான முதலாம் இராஜஇராஜன் காலத்தில் பெருமாற்றம் ஏற்படலாயிற்று. அதுவரை மழைத்தெய்வமான வருணபகவானையும் கடல்தாயினையும் தமது தெய்வமாகப் போற்றி வணங்கி வந்த எம்மவர்கள் வாழ்வில் மாரியம்மன் வழிபாடு கருக் கொண்ட காலமாக இதனைக்கருதலாம்.

**கோடியாக்கரை!................**

ஏறத்தாழ 991 ஆம் ஆண்டுகளில் இராஜஇராஜசோழனது படைகள் இலங்கையின் அநுராதபுரம் உட்பட வடகிழக்கு பகுதி முழுவதையும் கைப்பற்றின. இராஜ இராஜனின் மகனான முதலாம் இராஜேந்திரனின் இப்படையெடுப்பைத் தொடர்ந்து இப்பகுதி சோழமண்டலத்தின் ஒரு பகுதியாக மும்முடிச்சோழமண்டலம் எனப்பெயர்பெற்றது. இதன் தலைநகரான பொலநறுவை ஜனநாதமங்கலம் என்றும் பெயரில் விளங்கியது. சைவத்துடன் தமிழையும் உயர்நிலைக்கு கொண்டுவந்த இம்மன்னனால் பொலநறுவையிலுள்ள “வானவன் மாதேவிச்சரம்” எனப் பெயர்பெற்ற சிவன் கோவில் நிறுவப்பட்டது. இக்கோவிலை வானவன் மாதேவி என்னும் தனதுதாயரின் பெயரில் இவன் அமைந்துள்ளதனைக் கொண்டே இம்மாமன்னன் தாய்வழிபாட்டிலும் மிகுந்த பற்றுடையவன் என்பதனை யாருமே உய்த்துணரலாம். இதனைவிட தஞ்சாவூரில் இவன்கட்டிய இராஜஇராஜகேசுவரம் என்றும் பெரிய கோவிலில் தன்தாய் தந்தையரின் உருவச்சிலைகளை அமைத்து அவற்றின் பராமரிப்புக்காக இவனின் தமக்கையார் குந்தவியின் பெயரில் பெரும் பொருள் வழங்கியுள்ளமையும் தஞ்சைக்கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தஞ்சாவூரைக் தலைநகராகக் கொண்டு பரந்த சோழ சாம்ராஜ்ஜியத்தை கட்டியாண்ட இம்மன்னன் காலத்தில் தஞ்சாவூருக்க கிழக்கே இருந்த நாகபட்டினம் பெரிய கடற்துறைமுகமாக விளங்கியது. அத்துடன் ஈழம் முதல் கடாரம் வரை தென்கிழக்கு திசைகளில் தனது பரந்து விரிந்த அரசினைக் காட்டிக்காக்கவும் கிழக்கிந்திய தீவுகள் மற்றும் சீனா என்பவற்றுடனான வர்த்தகத் தொடர்புகளுக்கும் ஏற்றதான மிகப்பலம் வாய்ந்த கடற்படையின் கடல் தொடர்புகளுக்காகவும் வேதாரணியம் மற்றும் கோடியாக்கரை போன்றவற்றையும் சிறந்த துறைமுகங்களாக இம்மன்னன் மாற்றியமைத்தான்.

இவ்வாறு சோழர்காலத்தின் இருபெருநகரங்களான தஞ்சாவூர் நாகபட்டினம் சாலையில் தஞ்சாவுரில் இருந்து எட்டுக்கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் இடமே புன்னைநல்லூர் ஆகும். இங்கு அமைந்திருக்கம் மாரியம்மன் கோவிலும் இம்மன்னனால் அமைக்கப்பட்டதாகவே இன்றும் கருதப்படுகிறது "சோழேந்திர விஜயம்" என்னும் நூலில் புன்னை நல்லூர் மாரியம்மன் என குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலமும் இக்கோவிலக்கு அருண்மொழிப்பேட்டை என்றும் கிராமம் மானியமாக வழங்கப்பட்டிருப்பதனையும் காரணம் காட்டியும் "அருண்மொழிவர்மன்" என்றும் பெயரால் அழைக்கப்படும் இராஜஇராஜசோழனாலேயே ஆரம்பத்தில் இக்கோவிலில் அமைக்கப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பின்னர் சரபோஜி மன்னாகளின் காலத்தில் "மாரியம்மாள்" புரம் என இத்தலம் வழங்கப்பட்டு வந்துள்ளமையும் கண்கூடு.

இவ்வாறு புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில் அமைக்கப்பட்ட காலத்தில் அமைக்கப்பட்டதே கோடிக்கரை முத்தமாரியம்மன் கோவிலாகும் தஞ்சாவூரில் இருந்து தென்கிழக்காக 112 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் இந்நகரம் திருமறைக்காடு என்று அழைக்கப்பட்ட வேதாரணியம் நகரில் இருந்து 10 கிலோமீற்றர் தெற்காகவும் அமைந்துள்ளது. நெடுங்கோட்டில் 79.9 பாகையில் அமைந்திருக்கும் இப்பட்டினத்திற்கும் எமது யாழ்ப்பாணத்தின் காரைநகருக்கும் இடையேயான நெடுங்கோடே பாக்குநிரினையும் வங்காளவிரிகுடாவையும் பிரித்து நிற்கின்றது. ஆங்கிலத்தில் pழiவெ உயடiஅநசந என அழைக்கப்படும் இப்பட்டினம் வல்வட்டித்துறையில் இருந்து 52 கிலோமீற்றர் வடமேற்கான அமைவிடத்ததைக் கொண்டும் காணப்படுகின்றது.

இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டின் பல இடங்களும் சரித்திரசான்றுகளாலும் இதிகாசமற்றும் இலக்கியகுறிப்புகளாலும் பெருமைபெற்ற இடங்களாகவும் தலங்களாகவும் இருக்கின்றன. இவ்வாறான நகரங்களில் பலவும் புறநானூறு மற்றும் அகநானூறு என்னும் நூல்களின் மூலம் இரண்டாயிரம் வருடம் கடந்தும் தமது பழமையினை பறைசாற்றி நிற்கின்றன.

கோடிக்கரையைப்பற்றி கூறப்படும் கதைகளில் பழைமையானது இராமாயணகாலத்தை சேர்ந்ததாகும். இராமர் இராவணனுடன் போர்புரிவதற்காக இலங்கைக்குப் பறப்பட்ட போது முதலில் கோடியாக்கரையில் இருந்தே இலங்கையைப்பார்த்தார். அங்கிருந்த பாhத்த பொழுது இராவணனுடைய நகரத்தின் பின்புறமே இராமருக்கு தெரிந்ததாம். வீரன் என்பவன் நேரிடையான போரின் போது பின்புறமாக எதிரியை தாக்கமாட்டான. என்பதால் தனுஸ்கோடிக்கு சென்று அங்கிருந்து இலங்கைக்குச் சென்றான். என்பது வாய்மொழியாக இங்கு வழங்கப்படும் கதையாகும். இக்கதை கம்பராமயணத்திலோ அல்லது வான்மீகி இராமயணத்திலோ கூறப்படாதது எனினும் இங்கிருக்கும் “இராமர் பாதம்” என அழைக்கப்படும் இடம் இராமர் இங்கே வந்ததற்கான இக்கதையின் தொல்லியல் சான்று போலவே நின்று நிலவுகின்றது. இக்கதையினை உறுதிப்படுத்துவது போன்ற பாடலொன்று அகநாநூற்றில் காணப்படுகின்றது.

அகம் என்பது தலைவன் தலைவியிடையே ஏற்படும் காதலையும் ஊடலையும் குறிப்பதாகும். இவ்வாறான அகநாநூற்றுப்பாடல்களில் 70வது பாடல் மதுரைத் தமிழ் கூத்தனார் கடுவன் மள்ளனார் பாடிய நெய்தல் திணைப்பாடலாகும். திணைஎனப்படுவது ஒழுக்கம் எனப்பொருள்படும். இப் பாடலின் 5 – 7 அடிகள் பின்வருமாறு

கொடுந்திமில் பரதவர் வேட்டம் வாய்த்தென
இரும்புலாக் கமழும் சிறுகுடிப்பாக்கத்துக்
குறங்கண் அவ்வலைப் பயம் பாராட்டி
கொழுங்கண் அயிலை பகுக்கும் துறைவன்
நம்மோடு புணர்த்த கேண்மை முன்னே
அலர்வாயப் பெண்டிர் அம்பல் நூற்றப்
பலரும் ஆங்(கு) அறிந்தனர் மன்னே இனியே
வதுவை கூடிய பின்றை புகுவது
பொன்வீ ஞாழலொடு புன்னை வரிக்கும்
கானலம் பெருந்துறைக் கவிரி மாநீர்ப்
பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்
விழவு அணி மகளிர் தழைஅணிக் கூட்டமும்
வெண்வேற் கவுரியர் தொல்முது கோடி
முழங்கு இரும் பௌவம் இரங்கும் முன்துறை
வேல்போர் இராமன் அருமறைக்(கு) அவித்த
புல்வீழ் ஆலம் போல
ஒலிஅவிந்தன்று அழுங்கல் ஊரே!..

இதன் கருத்தாக “உன்னை அவர் திருமணம் செய்து கொள்வதற்கு முன் உங்களுடைய காதல் தொடர்பைப்பற்றி ஊர்ப் பெண்கள் பலரும் பலவிதமாகப் பேசினார்கள் ஆனால் நீங்கள் இருவரும் திருமணம் செய்துகொண்டதும் யாரும் உங்களைப்பற்றிப் பேசாமல் அமைதியாகிவிட்டார்கள். இது இராமர் சீதையை மீட்டு வருவதற்கு இலங்கைக்கு செல்வதற்கு முன் தமது படைகளுடன் கோடிக்கரைக்கு வந்து அங்கிருந்த ஆலமரத்தடியில் நின்று அலோசனை செய்தாராம். அப்பொழுது ஆலமரத்தில் இருந்த பறைவைகள் சத்தமிட்டு அமைதியைக்குலைக்காமல் அவைகளை அமைதியடையச் செய்தது போல் ஊர் அமைதியாகிவிட்டது. என்பதே இப்பாடலின் பொருளாகும்.

இப்பாடலில் வரும் அடிகளான “வென்வேற்கவுரியர் தொல்முதுகோடி” எனக்குறிக்கப்படும் அடிகள்மூலம் தொல்முடிகோடி அல்லது அதிசேது எனப்படும் இவ்விடம் கவுரியர் எனப்படும் பாண்டியர்களுக்கு உரியதாகின்றது. சோழநாட்டில் தென்எல்லையில் கடைசிப்பதியாக விளங்கும் இப்பகுதி சில காலங்களில் பாண்டியர் வசமாக இருந்ததென்னும் வரலாற்றுச் செய்தியையும் இப்பாடல் மூலம் அறியலாம்

வரகுணன் என்பவன் கிபி 792 - 835 வரை ஆண்ட பாண்டிய மன்னனாவான் இவனை “கொற்றவர்கள் தொழுகழற்காற் கோவரண மகராசான்” என சின்னமனூர்ச் செப்பேடுகள் கூறுகின்றன இவனது நான்காம் ஆண்டு கல்வெட்டு திருவியலூh திருநெய்த்தானம் என்றும் ஊர்களிலும் ஆறாம் எட்டாம் பத்தாம் ஆண்டு கல்வெட்டுக்கள் கும்பகோணம் செந்தலை ஆகிய ஊர்களிலும்ம பதினோராம் ஆண்டுக் கல்வெட்டுக்கலள் திருச்சிராப்பள்ளி திருக்கோடிக்கா மற்றும் திருச்சிராப்பள்ளி என்னும் ஊhகளிலும் அழிந்து போன கல்வெட்டொன்று திருச்சோற்றுத்துறையிலும் இருந்ததால் இவன் காலத்தில் சோழ மண்டலம் முழுவதும் இவனது பாண்டிய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது புலனாகின்றது.(பாண்டியர் வரலாறு. சதாசிவபண்டாரத்தார் பக்கம் 58-59)

இதனைத் தொடர்ந்து கோடிக்கரையைப்பற்றி எமக்கு கிடைக்கும் சான்றுகள் சுந்தரமூர்த்திநாயனர்ரும் சேரமான் பெருமான் பெருமான் நாயனாரும் கோடிக்கரைக்கு வந்து இங்குள்ள “கோடிக்குழகர்” கோயிலைத் தரிசித்து பாடியதாகும். இப்பாடல் பெரியபுராணத்தில் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இப்பாடலின் பண் கொல்லி ஆகவும். புராணச்செய்யுள் 88 ஆகவும் காணப்படுகின்றது.

கோடிக்குழகர் கோவிலின் தலபுராணம் அல்லது தலவிசேடம் பின்வருமாறு தேவர்கள் பாறக்கடலை கடைந்து பெற்ற அமுதத்தினை வாயுவிடம் கொடுக்க அவரும் அதனைக் கொண்டு வானவீதியில் செல்லும் போது அது கீழே விழுந்து

சிவலிங்கமாக மாறியதே இப்பதியாகும். பின்னர் தேவர்கள் இங்கே வந்து அச்சிவலிங்கத்தை வணங்கி அமுதம் பெற்றனர். அதனால் இங்கு உறையும் சிவனின் பெயர் அமிர்தகடேசர் ஆகும்.அம்மையின் பெயர் மையார்தடங்கண்ணி ஆகும். சுந்தரமூர்த்தி நாயனாரின் நாற்பது அடிகள் கொண்ட இப்பாடல் (தேவாரம்)

கடித்தாற் கடற்காற்று வந்தெற்றக்கரைமேல்
குடிதான் அயலெ இருந்தாற் குற்றமாமோ
கொடியேன் கண்கள் கண்டன கோடிக்குழகீர்
அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே.

என ஆரம்பிக்கின்றது இதன் 16 – 20 அடிகள் பின்வருமாறு

மையார்தடங்கண்ணி பங்காகங்கையாளும்
மெய்யாகத்திருந்தனள் வேறிடம் இல்லை
கையார்வளை காடுகாளோடும் உடனாய்
கொய்யார் பொழிற்கோடியெ கோயில் கொண்டாயே.

எனக் காணப்படுகின்றது.

இங்கு குறிப்பிட்டிருக்கும் மையார் தடங்கண்ணியும் கங்கையாள் என்னும் கங்காதேவியும் சிவபிரானுடன் உடனிருப்பவர்கள். மூன்றாம் வரியிற் குறிப்பிடப்படும் “காடுகாள்” என்பது “காடுகிழாள்” எனப்படும் துர்க்கையாகும். (வெற்றித்தெய்வமாக சிலப்பதிகாரத்தில் போற்றப்படும் கொற்றவையே பின்னர் துர்க்கைஎன அழைக்கப்பட்டதாக வரலாறு) கோடிக்கரை குழகர் கோவிலின் உள்ள தேவிக்கு உரிய பெயர் “மையார்தடங்கண்ணி” யாகும். சிவனின் தலையில் இருப்பவளே கங்கையாகும். மூன்றாவதாக குறிப்பிடப்படும் காடுகிழாள் எனப்படும் துர்க்காதேவியும் இப்பகுதியில் குடிகொண்டிருப்பதையே இப்பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன.

வேதாரணியத்தில் கிடைத்த கல்வெட்டொன்று (Ins 501 of 1904) போசளமன்னனான வீரசோமேசுவரன் உடைய படைத்தலைவனாகிய “சிங்கண்ணதண்டநாயகன்” என்பவன் கி-பி 1241 ல்சோழநாட்டின் மீது படையெடுத்து வந்த போது அழிக்கப்பட்ட “திருக்கோடிக்குழகர்” கோயில் கி-பி 1246ல் ஐம்பதினாயிரம் காசு கொண்டு மீண்டும் கட்டி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது எனக்கூறுகின்றுது.

**சக்திபீடமான கோடிக்கரை:-**

தக்கன் என்னும் அசுரனின் மகளாக அவதரித்தவர் உமாதேவியாh தக்கன் யாகம் செய்த பொழுத தனது கணவனாகிய சிவபெருமானின் பேச்சைக்கேளாமல் தந்தையின் மேலிருந்த பாசத்தால் யாகத்தினைக் காணச்சென்றார். அங்கு கணவனின் மேலிருந்த கோபத்தால் தனது தந்தையாராலேயே அவமதிக்கப்பட்டதனால் மனம் பொறுக்காமல் யாககுண்டலத்திலேயே பாய்ந்து உயிரை விட்டார். இதனைக்கேள்வியுற்ற சிவபொருமான் அடங்காத சினத்துடன் அங்கே சென்று தனது தேவியின் உடலை எடுத்ததுத்தலையில் வைத்து ஆக்ரோசமாக சுழன்று சுழன்று ஆடியபடி உலகமெல்லாம் திரிந்தார். இதனால் பூமி நடுங்கியது. கடல் பொங்கியது. கோள்கள் யாவும் நிலைதடுமாறி சுழன்றன. பிரம்மா முதல் அனைத்துத் தேவர்களும் அஞ்சி நடுங்கினர். காத்தல்கடவுளாகிய விஸ்ணுவும் தனது சக்கராயுதத்தினால் பராசக்தியின் உடலை துண்டுகளாக்கி அவைகளை சிவனின் கரங்களிலிருந்து தெறித்து விழச்செய்தார். இவ்வாறு பாரதநாட்டின் பல பாகங்களிலும் சக்தியின் உடற்கூறுகள் விழுந்த இடங்களே சக்திபீடங்கள் என அழைக்கப்படுகின்றன. இச்சக்திபீடங்கள் ஐம்பத்தியொன்று எனவும் அறுபத்திநான்கு எனவும் நூல்கள் வெளவேறாகக் கூறுகின்றன. தேவிபாகவத்தில் நூற்றியெட்டு சக்திபீடங்கள் என வியாசர் கூறுகின்றனர். இவ்வாறு வெளவாறாக கூறப்பட்டுள்ள அனைத்து சக்திபீடங்களிலுமே கோடிக்கரையையும் ஒருசக்திபீடமாக குறிப்பிடப்பட்டுள்ளமை இவ்விடத்தின் சிறப்பிற்கு சான்றாகும்.

சக்திபீடங்களை ஐம்பத்தியென்று என்று கூறுவோரும் அறுபத்திநான்கு எனக்கூறுவோரும் கோடிக்கரையிலுள்ள சக்திபீடத்தினை உருத்திராணி பீடம் எனக்குறிப்பிட்டுள்ளனர் இதேவேளை நூற்றியெட்டு சக்திபீடங்களாக குறிப்பிட்டோh கோடிக்கரையில் கோடவீ என சக்திபீடத்தினைக் குறிப்பிட்டுள்ளனர். கோடவீ என்பது துர்க்கையைக்குறிப்பதாகும். உருத்திராணி எனப்படுவது ஸ்ரீ பராசக்தியாகும் மாரியம்மன், காளியம்மன், துர்க்கையம்மன் என்பனவெல்லாம் பெயர்களில் வேறுபாட்டாலும் பராசக்தியின் வெளவேறு அவதாரங்களேயாகும். எனினும் கோடிக்கரையில் சக்திக்கென இருக்கும் தனிக்கோவில் மாரியம்மன் கோவிலே யாகும் இதன்மூலம் கோடிமுத்தமாரி என்பது சிறப்புடைய சக்திபீடம் எனஉணரப்படும். இதேவேளை உருத்திராணியின் பீடமான “உருத்திரகோடி என்னும் இத்தலமானது கடற்கரையினை அண்டி அமைந்திருந்ததனால் காலப்போக்கில் உருத்திர என்னும் பெயர் மருவ கோடிக்கரை என்பது பெயராக நிலைத்து விட்டது எனலாம். இதன் மூலம் ஆரம்பத்தில் இப்பிரதேசம் முழுமையுமெ உருத்திரகோடி என அழைக்கப்பட்டு பின்னர் கோடிக்கரை என மாற்றமடைந்து உள்ளது.

பராந்தக சோழனால் முதன்முதல் நடத்தப்பெற்ற ஈழப்படையெடுப்பு முதல் இராஜஇராஜசோழன் மற்றும் இரேஜேந்திரசோழன் என சோழ மன்னர்களின் இலங்கைப்படையெடுப்பின். கடல் தளமாக கோடிக்கரையும் விளங்கியது. பாக்குநீரிணையை தெற்கு எல்லையாகவும் வங்காளவிரிகுடாவை கிழக்கு எல்லையாகவும். கோண்டிருக்கும் இப்பட்டினத்தின் தென்கிழக்குப்பகுதியிலேயே இவ்விருகடல்களும் சங்கமமாகின்றன. இவ்விடம் உருத்திரகோடி என அழைக்கப்படுகிறது. வங்களவிரிகுடாவின் பாரிய அலைகளிற் தாக்கம் ஒரு புறமும் வங்காளவிரிகுடாவும் பாக்குநிரினையும் மோதிஎழும் நீர்ச்சுழிகளின் மோதுகை மறுபுறமாக கோடிக்கரையின் கடலோரப்பகுதிகள் சிறிதுசிறிதாக மறைந்து வருகின்றன இவ்வாறு கடலாலும் காடுகளாலும் கொள்ளப்பட்ட பழமைவாய்ந்த கோவில்கள் பின்வருமாறு

தென்கோடிவிநாயகர்
தென்கோடி நாரதர்
கோடிஸ்வரன்
நவகோடிசித்தர் ஆச்சிரமம்
கோடிக்குழகர்
வார்த்திககாளி
அகத்தியர்
சேவுகராஜன்
ஸ்ரீராமர்தீவு

இவ்வாறு கடலுக்குள் மறைந்துவிட்ட கோயில்களின் பட்டியல் இருக்கும் போது கடலில் வரும் கலங்களுக்கு வழிகாட்டியாக அமைக்கப்பட்டதும் ராஜமினாரா அல்லது பழையமினாரா என அழைக்கப்படும் கலங்கரைவிளக்கு கரையில் இருக்கவேண்டியது. இன்று கடலுக்குள் தன்தலையைக்காட்டியபடி இன்னமும் நிமிர்ந்து நிற்கிறது. இது மூழ்கிவிட்ட நிலப்பகுதியம் இன்றும் மூழ்கிக்கொண்டிருக்கும் தரைப்பகுதியையும் அடையாளம் காட்டும் அற்புத அடையாளச்சின்னமாக மாற்றமடைந்து காணப்படுகின்றது. இந்த கலங்கரைவிளக்கு இராஜஇராஜசோழனுக்கு இளவரசுப்பட்டம் கட்டியபோது சுந்தரசோழனால் நிறுவப்பட்டதாகும்.

மேற்கூறியவாறு பலகோயில்கள் அழிந்தும் அடையாளம் மாறிப்போய் இருந்தும் சுமார்ஆயிரம் வருடங்களிற்கு முன்பு அமைக்கப்பட்ட கோடிக்கரை முத்துமாரியம்மன் கோவில் இவ்விடைக்காலங்களில் பல்வேறு மாற்றங்களைக்கண்டும் உருமாறியும் இன்றும் கோடிமுத்துமாரியம்மனாக இவ்வூரில் நின்று நிலவுகின்றது. முத்துமாரியம்மனின் அருளுடன் திகளும்

கோடிக்கரை அன்றும் இன்றும் என்றுமே முத்துமாரியம்மன் மீது தீராத காதலைக் கொண்டவர்கள் வாழும் பூமியாகும். இதனை பின்வருமாறு தமிழ்மொழி ஆய்வில் முன்னோடியான இராமச்சந்திரதீட்சிதர் கூறுகின்றார்.

கோடிக்கரையில் இன்றும் வழக்கத்தில் இருக்கும் கள்ளத்தோணி படகு வகைகளில் சிறப்புடையது ஒனறாம். கண்ணூறுபடுவதால் உண்டாகும் கேட்டினை தவிர்த்தல் பொருட்டு கைமுத்திரை இடுதல் இதில் குறிபிபிடப்பட்டிருக்கும் சிறப்பியல்பாகும். இருபக்கங்களிலும் குறைதீர்க்கும் குறியாம் "உ" குதிரைவழிபாடும் பெண்தெய்வத்தின் பெயர்கள் என்பனவும் பொறிக்கப்பட்டிருக்கும். மீன்பிடிக்கப்போவார் போவதன் முன் மாரியம்மனை வழிபடுதல் கோடிக்கரையில் இன்றும் வழக்கத்தில் இருக்கின்றது மேலும் ஒரு வியப்பு என்னவென்றால் இவ்வழக்கம் உலகெல்லாம் உள்ள வழக்கமாம். (தமிழர் தோற்றமும் பரவலும். புலவர் கா. கோவிந்தன் பக்கம் 116)

இத்தகைய கோடிமுத்துமாரியம்மனுக்கும் வல்வட்டித்துறை முத்துமாரியம்மனுக்கும் மிகநெருங்கிய தொடர்புண்டு. இதனை இன்னொருவகையாக் கூறினால் கோடிக்கரையில் இருந்த முத்துமாரியம்மனே வல்வட்டித்துறையில் வந்து கோயில்கொண்டருள்வதாக வல்வட்டித்துறை முத்துமாரியம்மன் கோவில் தலவரலாறு கூறுகின்றது. கோடிக்கரை முத்துமாரியம்மன் கோவில்தலவரலாறு மறபுறமான கதையொன்றைக் கொண்டுள்ளது. அதன்படி வல்வட்டித்துறையில் இருந்துவந்த முத்துமாரியம்மனே கோடிக்கரையில் கோயில் கொண்டருள்வதாகதாக அங்கும் ஒருகதையுண்டு

வல்வெட்டித்துறை
முத்துமாரியம்மன் தலவரலாறு!.............

997 ஆம் ஆண்டில் இராஜஇராஜனின் படைகள் வடஇலங்கையைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இலங்கைக்கும் சோழநாட்டுக்குமான தொடர்புகள் மிக வேகமாக அதிகரித்து வத்தன. ஆயிரக்கணக்கான தமிழ்நாட்டுப் போர்வீரர்கள் இலங்கையில் காலூன்றியதால் அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யும் உணவு மற்றும் தளபாடங்களும் சோழநாட்டில் இருந்து இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டன. .இதனால் போர்வீரர்கள் தவிர்ந்த அவர்களின் உதவியாளர்களும் இலங்கைக்கு வந்து சேர்ந்தனர். இந்நிலையில் இவர்களுடைய குடும்பத்தினர் சோழநாட்டிலேயே இருந்ததனால் போர்வீரர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் கடிதப்போக்குவரத்தும் தொடர்ந்திருந்தன. அவ்வாறான ஒருநாளில்

கோடிக்கரையின் “கணக்கர்மடத்தில” இருந்து மூன்று படகுகள் வல்வட்டித்துறையை நோக்கிப்புறப்பட்டன.

அப்படகுகள் புறப்படும் சமயத்தில் அங்குவந்த கறுத்தமூதாட்டி ஒருவர் தன்னையும் ஏற்றிச்செல்லுமாறு கூறிக்கொண்டே அப்படகுகளின் ஒன்றில் ஏறிஅமர்ந்து கொண்டார். படகோட்டிகளுக்கோ ஆச்சரியத்துடன் கோபமும் ஏற்பட தம்மைமீறிப்படகில் ஏறியமூதாட்டியை இறங்குமாறு பணித்தார்கள். ஆனால் மூதாட்டியோ தான் இறங்கமாட்டேன் எனத்தொடர்ந்து பிடிவதமாக படகிலேயே இருந்தார்., அவரை இறக்கிவிட வழிதெரியாமல் படகோட்டிகளும் நீ யார்? எங்கே போகின்றாய்? என வினாவினார்கள்! அதற்கு மூதாட்டியும் தனது பெயர் “கயிலைமலைமாதரசி” என்றும் தான் வல்வட்டித்துறைக்கு போக வேண்டும்! எனக் கூறினார்! என்ன காரணத்திற்காகப் போகின்றாய? எனக் இவர்கள் மறுபடியும் கேட்ட கேள்விக்கு பதிலேதும் கூறாமல் சிரித்துவிட்டு கடலைப்பார்த்தவாறு இருந்தாராம்

இறுதியாக படகோட்டிகள் மூதாட்டியையும் ஏற்றிக்கொண்டு வல்வட்டித்துறையை நோக்கிய பயணத்தை ஆரம்பித்தார்கள். ஆரம்பத்தில் அமைதியாக இருந்த கடல் படகுகள் நடுக்கடலை அடைந்ததும் அலைகள் சீறிக்கொண்ட கொந்தளிக்க காற்றும் வேகமாக வீசிக்கொண்டதால் படகு கவிழ்ந்து விடாமல் இருக்க பாயைச்சுருக்கிய படகோட்டிகள் அபத்தில் இருந்து காப்பற்றுமாறு கடல்த்தாயை கூவி அழைத்தார்கள். இவ்வாறு இவர்கள் கூறி அழைக்கவும் அதுவரை அமைதியாக இருந்த மூதாட்டியும் பொங்கிவந்த கடல் அலையில் கைவைத்து “சீ சும்மா இரு” என அதட்டினார்.

அவ்வளவில்பொங்கிய கடலும் அமைதியடையவே ஆச்சரியத்துடன் படகோட்டிகளும் வல்வட்டித்துறையை நோக்கிப் படகைக் செலுத்திச் சென்றனர். வல்வட்டித்துறையில் அக்காலத்தில் பிரசித்தமாயும் கடல் துறையாகவும் விளங்கிய இன்றைய கப்பல்கிழவன் கோவிலுக்கு அண்மையில் கரையேறிய படகுகளில் இருந்து பொருட்களை இறக்குவதற்கு முன்பாகவே கரையில் இறங்கிய மூதாட்டியும் அவர்களுக்கு ஆசி கூறிவிட்டு அங்கிருந்து தெற்கு நோக்கி விட்டார். படகுகளில் இருந்து பொருட்களை இறக்கிவிட்டு படகோட்டிகள் சென்ற பொழுது இன்று முத்துமாரியம்மன் கோவில் அமைந்திருக்கும் இடத்தில் நின்ற வேப்பமரத்தின் கீழ் அம்மூதாட்டியும் அமர்ந்திருக்கக் கண்டார்கள். அதன் பின் அந்த வேப்பமரத்தடியில் சில நாட்கள் காணப்பட்ட அந்த மூதாட்டியை பின்னர் யாருமே காணவில்லையாம். ஆனால் இது நடந்து சில நாட்களின் பின் இரவில் அந்த வேப்பமரத்தடியில் ஒளி ஒன்று தென்பட ஆரம்பிதத்தாம் இவ்வாறு அந்த வெளிச்சத்தைக் பல தடவைகள் கண்ட அப்படகோட்டிகளும் ஏற்கனவே கடல்மீது தாம் கண்ட அதிசயத்தையும்

நினைத்து தம்முடன் கோடிக்கரையில் இருந்து வந்த மூதாட்டி வேறுயாருமல்ல மாரியம்மனே! என உணர்ந்து அந்த வேப்பமரத்தடியில் ஒரு கொட்டில் அமைத்து வழிபட ஆரம்பித்தார்கள். காலம் செல்லச்செல்ல இடையில் பல மாற்றங்களிற்கு உள்ளாகிய முத்துமாரியம்மன் தேவஸ்தானம் இன்றைய உருவையடைந்தது.

கோடிக்கரை முத்துமாரியம்மன் தலவரலாறு!........

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கோடிக்கரையில் இருந்து இலங்கைக்கு போக்குவரத்து வைத்துக் கொண்டு வர்த்தகம் செய்து வந்து இருக்கிறார்கள். அவ்வாறான ஒரு நாளில் வல்வட்டித்துறையில் இருந்து கோடிக்கரையை நோக்கி தண்டையல் சுக்கானி இவர்களின் உதவியலரான கிலாசு என்னும் மூன்று பேர் புறப்பட்டார்கள். அடைகரையில் இருந்து முகத்துவாய் (வான் அல்லது வட்டி) வழியாக படகு வெளிக்கடலுக்கு வரும் சமயத்தில் சரியான ஞானப்பாரம் (சமநிலை) இன்மையால் படகு ஒருபக்கம் சரிந்தது. உடனே தண்டையல் உதவியாளரைக் கூப்பிட்டு "மகனே சமநிறை தவறியதால் படகு ஒருபுறம் சரிகிறது அதனால் அடுத்த பக்கத்தில் நல்லநிறையுள்ள கல்லொன்றை எடுத்துவை" எனக் கூறினார். உதவியாளரும் அவ்வாறே கல்லொன்றை எடுத்து வைத்தார். சமநிலை அடைந்த படகும் கோடிக்கரையை நோக்கி அந்த இரவில் ஓடலாயிற்று.

கோடிக்கரையை நெருங்க நெருங்க கடல் கொந்தளித்து புயலுடன் மழையும் பொழிய ஆரம்பித்தது. கரையை அண்மித்துவிட்டதால் எந்தவித பயமுமின்றி சமநிலைக்காக வைத்த கல்லைத்தூக்கி எறிந்துவிட்டு இவர்களும் கரையை அடைந்தனர். இவர்கள் அக்கல்லை எறிந்த இடம் இன்று பழைய மினாரா எனப்படும் கலங்கரைவிளக்குக்கு அண்மையில் அமைந்திருந்த கிச்சான் ஓடையாகும்.

அடுத்த சில நாட்களில் அவ்விடத்தில் மீன்பிடிக்கப்போன மீனவர்கள் தமது வலைகளுக்குள் ஒரு பாரமான பொருள் மாட்டிக் கொண்டதை உணர்ந்தார்கள. கல்லென நினைத்து வலையை இழுத்த அவர்களுக்கு கிடைத்ததே அழகான அம்மன் சிலையாகும். தொழில்முடிந்து வீட்டுக்கு வரும்போது அச்சிலையையும் கொண்டுவந்தவர்கள் கோடிக்கரை பீச்சாலாத்திக் குளத்தில் அதனைப்போட்டுவிட்டு வீட்டிற்குப் போய்விட்டார்கள்.

மறுநாள் முதல் கோடிக்கரையில் அம்மை வாந்திபேதி என நோய்கள் ஏற்பட்டு அதனால் இழப்புக்களும் அதிகரித்தன. இதனால் ஊரிலுள்ள மக்கள் அனைவரும் மனவருத்தத்தில் மூழ்கினர். இந்நிலையில் ஊர்தலைவர் ஆகிய

“நாட்டாண்மை”யின் கனவில் வந்த மூதாட்டியெருவர் நான் வல்வட்டித்துறையில் இருந்து வந்து இங்கு குளத்தில் கிடக்கிறேன். என்னை எடுத்து ஊருக்கு மேற்கில் உரல் உலக்கைச்சத்தம் கேட்காத இடத்தில் கோயில் கட்டி என்னை வழிபட்டால் ஊர்மக்களிற்கு ஐஸ்வர்யத்தைக் கொடுத்து காப்பாற்றுவேன் என சொல்லிச் சென்றாராம்.

விழித்தெழுந்த நாட்டாண்மையும் ஊர்மக்களிற்கு நடந்ததைக்கூறி சிலையைத்தேடினர். அம்மன்சிலை இருந்த இடத்திற்கு மேலாக கருடன் ஒன்று வட்டமிட்ட அடையாளத்தைக்கண்டு அச்சிலையை எடுக்க குளத்தைத் தோண்டினர். இவ்வாறு குளத்தை தோண்டியபோது அம்மன்சிலையுடைய கைகள் தற்செயலாக வெட்டுப்படவே இரத்தம் பாய்ந்து குளம்முழுவதும் இரத்தமாகியது. சிலையை எடுத்து வெட்டப்பட்ட கைளில் சந்தனத்தை அப்பியவுடன் இரத்தம் வழிவது நின்றுவிட்டது. அம்மன் நாட்டாண்மையின் கனவில் கூறியது போல கோடிக்கரையின் மேற்குப்புறத்தில். கோயிலமைத்து மக்கள் வழிபட்டுவரலானார்கள்.

இவ்வாறு இருகோயில்களின் தலவரலாறுகளுமே ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த கதையைக் கொண்டு காணப்படுகின்றமை ஆச்சரியமளிக்கின்றது.

“தமிழ்நீ”.பொன்.சிவகுமாரன்